UNHCR
The UN Refugee Agency

# மலேசியாவில் அகதி அந்தஸ்து கோருவோருக்கான அடிப்படைத் தகவல்கள்.

## UNHCR இன் பங்கு

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளின் உயர் ஆணையர் (UNHCR) ஒரு அகதிகளுக்கான நிறுவனமாகும். இது ஐக்கிய நாடுகளால் 1951ல் அகதிகளுக்கான சர்வதேச பாதுகாப்பும் தீர்ப்புகளும் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. UNHCR, அகதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக செயல்பட்டு வருவதுடன் அவர்களின் நலங்களை மேம்படுத்தி பாதுகாப்பான நிரந்தர தீர்வுகளும் வழங்கிவருகின்றது.

## அகதி என்பவர் யார்?

1951 அகதிகள் சம்பந்தமான ஜெனீவா மகாநாட்டின் தீர்மானத்தின்படி அகதி என்பவர் தனது உயிர் ஆபத்தாலோ அல்லது அச்சுறுத்தலாலோ சொந்த நாட்டை விட்டு வேறு நாட்டிற்குத் தப்பி வந்திருக்க வேண்டும். அகதி என்பவர் இனம், மதம், குடியுரிமை, அரசியல் கருத்துக்கள் அல்லது தனிப்பட்ட சமூக இயக்கங்களில் அங்கத்தினர் என்பவற்றில் ஏதாவது ஒரு காரணத்தால் உயிருக்குத் தகுந்த பாதுகாப்பு அல்லது அச்சுறுதல் இருப்பதால் சொந்த நாட்டிற்கு திரும்பச் செல்ல முடியாது.

விண்ணப்பதாரர்கள் கடும் குற்றங்கள் புரிந்திரிப்பீர்களேயானால் இப்பதிவில் இருந்து விலக்கப்படுவீர்கள்.

## எவ்வாறு UNHCR இல் பதிவு செய்யலாம்?

நீங்கள் UNHCR இல் பதிவு செய்வது சர்வதேச பாதுகாப்புக்கான முதற்படி.
உங்களுடைய தனிப்பட்ட விபரங்கள், பயணப் பாதகள் அகதி விண்ணப்பத்திற்கான காரணங்கள் போன்றாவைகள் பதிவின் போது உட்படுத்தப்படும் அத்துடன் அடையாளத்தை உறுதிப்படுத்த புகைப்படம் மற்றும் கைரேகை போன்றவைகள் எடுக்கப்படும். மியன்மார் மற்றும் மியன்மார் அல்லாத நாட்டவர்களின் பதிவு வெவ்வேறாக நடைபெறும்.

***<u>மியன்மார் அல்லாத நாட்டவர்களின் பதிவு:</u>***
UNHCRஇன் பதிவுக்கான நியமனத்தைப் பெறுவதற்கு நீங்கள் புதங்கிழமைகளில் மதியம் 12.00 மணிக்கு (பொது விடுமுறைகள் தவிர்ந்த) இவ் அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும். இந்நேரத்திற்கு முன்னர் வருபவர்களுக்கு எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படமாட்டாது என்பதைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவும். கொள்கைகளில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் வெளியில் இருக்கும் அறிவிப்புப் பலகையில் தெரியப்படுத்தப்படும்.

***<u>மியன்மார் நாட்டவர்களின் பதிவு:</u>***
மியன்மார் நாட்டு அகதி விண்ணப்பதாரிகள் பெருமளவு இருப்பதால் அவர்களுக்கான பதிவு இவ்வலுவளகத்தால் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. புது விண்ணப்பதாரர்களின் பதிவுகள் எதிர் காலங்களில் நடைபெறுவதற்கு UNHCR அவர்களது சமூககங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும்.

***<u>பதிவுக்கு வரும் போது எடுத்து வரவேண்டியவை:</u>***
- உங்கள் விண்ணப்பம் சம்பந்தமான அனைத்து ஆவணங்க்களையும் உங்களது நியமனத் திகதியில் எடுத்து வரவும். உ+ம்: கடவுச்சீட்டு, அடையாளப் பத்திரங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணப் பதிவுச் சான்றிதழ், குடும்ப அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை.
- தயவு செய்து UNHCR நியமனத் திகதி அட்டை, UNHCR பரிந்துரைக் கடிதம் போன்றவற்றை நியமனத் திகதி அன்று கொண்டுவரவும்.
- ஏன் மற்றும் எவ்வாறு நாட்டை விட்டு வந்தீர்கள் என்ற தகவல்கள் அடங்கிய ஒரு விளக்கக் கூற்றை உங்களுக்கு இயலுமான மொழியில் எழுதி எடுத்து வரவும்..

***<u>கவனத்திற்கு:</u>***
- பதிவின் போது அகதி விண்ணப்பம் கோரும் அனைவரும் (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட மற்றும்/ அல்லது சார்ந்து இருப்பவர்கள்) அலுவலகத்திற்கு சமூகம் அளிக்கவேண்டும்.
- முக்கியமாகப் பதிவின் போது முழுமையாகவும் நேர்மையாகவும் மட்டும் தகவல்களை வழங்கவேண்டும். தவறான மற்றும் முழுமையற்ற விபரங்கள் வழங்குவதால் மிகவும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.
- ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கோப்பு எண் வழங்கப்படும். எதிர்காலங்களில் இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் போது இந்த கோப்பு எண்ணைக் குறிப்பிடவும்.
- சில வேளைகளில் முழுநாளும் அலுவலகத்தில் காத்திருக்க நேரிடும். தயவு செய்து பொறுமைக் கையாளவும்.
- UNHCRஇல் பதிவு செய்த பின்னர் உங்களுக்கு அகதி விண்ணப்பச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் அச்சான்றிதழ் உங்கள் அடுத்த நியமனத் திகதியில் காலாவதியாகும். அத்துடன் உங்களுக்கு ஒரு நியமனத் துண்டும் வழங்கப்படும்.

***<u>குடும்ப உருப்பினர்களை உள்ளடக்கல்:</u>***
- உங்கள் விண்ணபத்தின் கீழ் உங்கள் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கலாம்.
- நீங்கள் ஏற்கனவே பதியப்பட்டு RSD நேர்காணலுக்காக காத்திருக்கும் ஒருவராயின் அந்தக் குறிப்பிட்ட திகதியில் பதியப்படாத குடும்ப உறுப்பினர்கள் இருப்பின் அவர்களையும் அழைத்துவரலாம்.
- நீங்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அகதியாயின் ஒரு கடிதமூலமாகவோ, தொலை நகல் (Fax: 603 2141 1780) அல்லது மின்னஞ்சலூடாகவோ (mlslureg@unhcr.org) உங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் உங்களின் கீழ் பதிவு செய்யலாம்.

பதிவு விதிமுறைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட தொடர்புகள் மூலம் தொடர்பு கொள்ளவும்.

## UNHCR இன் அகதி அந்தஸ்துக்கான நிர்ணயம் (RSD)

பதிவு செய்யப்பட்ட பின்னர் அகதி அந்தஸ்துக்கான நிர்ணய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் நடவடிக்கைகளுக்காக ஒருவருடம் காலம் செல்லும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
RSD நேர்காணலின் போது உங்களின் அகதிக்கான தகுதி பரிசீலிக்கப்படும்.
அகதி அந்தஸ்துக்கான நிர்ணயத்தின் போது:
- அனைத்து ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும்
- உண்மையாகவும் ஒத்துழைப்புடனும் இருக்கவும்.
- உங்களுடன் இருக்கும் சக குடும்ப உறுப்பினர்களைப் பற்றி அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தவும். வயதுக்கு வந்த குடும்ப அங்க்கத்தவர்கள் வெவ்வேறாக நேர்காணல் செய்யப்படுவார்கள். மேலும் RSD நேர்காணலுக்கான திகதியும் வழங்கப்படும்.

<u>அகதி அந்தஸ்துக்கான நிர்ணயத்தின் போது உங்களது உரிமைகள்:</u>
நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய மொழியில் நேர்காணல்.
UNHCR இன் நடைமுறைகள் தெரிந்த சட்டப்பிரதிநிதி அல்லது வழக்கறிஞ்சர் உங்களின் அகதி அந்தஸ்துக்கான நிர்ணய நேர்காணலின் போது பிரதிநிதிக்கலாம்

<u>எனது விண்ணப்பம் சம்பந்தமான முடிவுகள் தெரிய எவ்வளவு காலம் எடுக்கும்?</u>
- இது ஒவ்வொரு விண்ணபத்தையும் பொறுத்திருக்கும். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக ஆராயப்படும். சுமாராக 1 மாதம் தொடக்கம் 6 மாதம் வரையாகும்.

<u>எனது முதல் அகதி அந்தஸ்துக்கான நேர்காணலின் பின்னர் என்னை அகதி என நிர்ணயிக்கப்படாவிட்டால் எனது நிலை என்ன?</u>
- எதிர்மறையான முடிவு தெரிவிக்கும் பட்ஷத்தில் மேல்முறையீடு செய்வதற்கு 30 நாட்கள் அவகாசம் வழங்கப்படும். உங்களது மேல்முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர் அந்த விண்ணப்பம் வேறு ஒரு அதிகாரியினால் பரிசீலனை செய்யப்படும். இவர், முதல் நிராகரிப்பு முடிவெடுத்த அதிகாரியல்ல.
- மேல்முறையீட்டு விண்ணப்ப அதிகாரியினால் முதல் அதிகாரியின் தீர்ப்பை மாற்றியமைத்து அகதி அந்தஸ்து வழங்கமுடியும். அதே நேரத்தில் பழைய முடிவுதான் மேல்முறையீட்டு விண்ணப்ப அதிகாரியினால் நிலைநிறுத்தப்பட்டால் உங்களுடைய கோப்பு மூடப்படும்.
- மேல்முறையீட்டு விண்ணபத்திற்கான முடிவு தயாராக்கப்படுவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருட காலம் வரை செல்லும்.

## உங்கள் கவனத்திற்கு:

- ஒவ்வொரு விண்ணபதாரரும் வெவ்வேறு சுயவிவரம், பின்னணி மற்றும் நாட்டை விட்டு வெளியேறியதற்கான காரணங்க்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரின் விண்ணப்பமும் தனித்தனியே UNHCR இன் சட்ட திட்டங்களின் கீழ் ஆராய்யப்படும். அகதி சமூகங்களுக்கிடையே குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் பற்றிப் பரப்படும் வதந்திகளை செவிமடுக்க வேண்டாம்..
- உங்கள் விண்ணபத்தில் வேண்டுமென்றே ஏதாவது தவறு அல்லது அடையாள மோசடி ஏதும் செய்திருந்தால் உங்கள் விண்ணபத்தில் பாதகமான விளைவுகளோ அல்லது தீர்வுகளோ ஏற்படும். இது போன்ற சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்க UNHCRக்கு உரிமை உண்டு.
- உங்களது வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் பிரத்தியேகமாகவும் பாதுகாப்பாகவும் பேணப்படும். உங்கள் அனுமதியின்றி இத்தகவல்கள் எந்த ஒரு மூன்றாம் நபருக்கோ பகிரப்படமாட்டாது. UNHCR இனால் எந்த ஒரு சந்தர்ப்பதிலும் உங்களுடைய தகவல்களை உங்களுடைய சொந்த நாட்டு அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளமாட்டாது.
- நீங்கள் வாசித்து, புரிந்து கொண்டு உங்களால் அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பமிடவேண்டாம்.
- உங்களுக்கு ஆதரவளிக்கும் நாடான மலேசியாவில் இருக்கும்போது மற்றய வெளிநாட்டவர்கள் போல நீங்களும் சட்ட திட்டங்களையும் மற்றும் கலை கலாச்சாரங்களையும் மதித்து நடப்பீர்கள் என எதிர்பார்க்கப்படுகிறீர்கள்.

UNHCR ஊழியர்களுக்கு சொற்கள் மற்றும் உடல் அச்சுறுத்தல்கள் போன்றவை தேசிய சட்டங்களை மீறும் செயல்களாகும். இச்செயல்களில் ஈடுபடுவோரை UNHCR பொலிசில் புகார் செய்வதுடன் வழக்குத் தொடரப்படும்.

- போர், ஆயுத மோதல் அல்லது வேறு எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்கள் குடும்ப உறுப்பினகளின் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பின் கீழ்வரும் இணையத்தளதின் உதவியை நாடவும். http://www.icrc.org/FAMILYLINKS.

## எவ்வாறு RSD இலாகாவை தொடர்புகொள்ளலாம்?

RSD சம்பந்தமான கேள்விகளுக்கு பின்வரும் மின்னஞ்சல் வழிமூலம் தொடர்பு கொள்ளவும்: mlslursd@unhcr.org

தயவு செய்து RSD சம்பந்தமான குறிப்பிட்ட கேள்விகள், மேலதிக ஆதாரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களில் ஏதும் மாற்றங்கள் போன்றவற்றைச் சமர்ப்பிக்கவும்.
தினசரி அலுவலகதில் பெற்றுக்கொள்ளும் அதிகளவு கேள்விகளால் காலதாமதம் ஏற்படலாம். தயவு செய்து பொறுமையைக் கையாளவும். உங்கள் கேள்விகளுக்கு எவ்வளவு விரவாக பதிலளிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக பதிலளிப்போம்.

கீழ்குறிப்பிட்ட UNHCR விலாசத்தில் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## தடுப்புக்காவல்

1951 அகதிகளின் பாதுகாப்பு, அங்கீகாரம் சம்பந்தமான ஐக்கிய நாடுகளின் சர்வதேச மகாநாட்டில் மலேசியா ஒரு தரப்பு அல்ல. (1951 அகதிகளின் நிலை தொடர்பான ஜெனீவா உடன்படிக்கை). அதனால், நீங்கள் மலேசியாவில் ஒரு சட்டபூர்வ குடிமகனாக அங்கீகரிக்கப்பட மாட்டீர்கள்.

<u>நீங்கள் போலீசாரால் நிருத்தபட்டால் அல்லது கைது செய்யப்படால்,</u>
- நீங்கள் அமைதியாக போலீசாருடன் ஒத்துழைத்து உங்கள் கைதுக்கான காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும்.
- UNHCR ஆவணங்கள்/கோப்பு இலக்கம் ஆகியவற்றை பொலீசாரிடம் காண்பித்து UNHCR இன் அவசர நேரடித் தொலைபேசி எண் 012-6305060 உடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு பொலிசாரை கேட்டுக்கொள்ளவும்.

- UNHCR இன் அவசர அழைப்பு எண் மற்றும் உங்களுடைய கோப்பு எண்களை நினைவில் வைத்திருக்க வேண்டும்.
- உங்களுடைய கோப்பு எண், கைது செய்யப்பட்ட இடம், காவல் நிலையம் மற்றும் கைது செய்த பொலிஸ் அதிகாரியின் பெயர் (முடியுமானால்) போன்ற விபரங்களை நண்பர்கள், குடும்ப உறுப்பினர்களுக்குத் உடனடியாகத் தெரியப் படுத்தவும்.

*<u>நீதிமன்றத்திற்கு அழைத்துவரும் போது:</u>*

- நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக UNHCR இடம் தெரிவிக்கவும். UNHCR மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களிடம் தொடர்பு கொள்ள நீதிபதியிடம் அனுமதி கோரவும்.
- மலேமொழி தெரியாதிருப்பின் மொழிபெயர்ப்பாளர் வேண்டுமெனத் தெரியப்படுத்தவும்.
- நீங்கள் UNHCR இன் பாதுகாப்பின் கீழ் உள்ள நபர் என நீதிபதிக்குத் தெரியப்படுத்தவும்.
- குடிவரவு சட்டம் 6(1)(c) இன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டால் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டாம். (வெற்று குற்றம்)
- எந்த ஒரு சூழ்நிலையிலும் தலையை ஆட்டவோ அசைக்கவோ வேண்டாம். நீதிமன்றத்தில் கூறப்பட்டவை விளங்காவிடில் UNHCR எனக்கூறி மொழி பெயர்ப்பாளர் தேவை எனக் குறிப்பிடவும். தேவைப்படின் இதைத் திரும்பத் திரும்பக் கூறவும்.

அவசரமான உதவிகளுக்கு mlsluopi@unhcr.org மின்னஞ்சலை நாடவும். மேலதிக விபரங்களுக்கு UNHCR இன் தடுப்புக்காவல் கையேட்டை பார்க்கவும்.

## அகதிகள் மற்றும் அகதி விண்ணப்பம் கோருவோர்களுக்கான சேவைகள்

அகதி விண்ணப்பம் கோருவோர், பொது சுகாதார வசதிகளை நாடலாம். ஆனால் வெளி நாட்டவருக்கான கட்டணம் வசூலிக்கப்படும். அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு 50% கழிவு அரச வைத்திய சுகாதார சேவை மையங்களில் வழங்கப்படும். ஆனால் இச் சலுகைகள் அகதி அந்தஸ்து விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது. தொற்று நோய்களுக்கான அரச வைத்திய சேவைகள் இலவசமாக வழங்கப்படும்.

ஆரம்ப சுகாதார சேவைகளுக்கு ACTS (பிரிக்பீல்ட்ஸ்) அல்லது Tzu-Chi (ஜலான் புடு) இலவச மருத்துவ மையங்களை நாடவும். மேலதிக விபரங்களுக்கு UNHCR இன் மருத்துவக் கையேட்டை பார்க்கவும்.
பணம் மற்றும் வைத்திய உதவிகள் பெற்றுக் கொள்ள, அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் மாத்திரமே தகுதியுடையவர்கள். நீங்கள் தீவிரமான மருத்துவ நிலைமையில் உள்ள, அவசரமாக மருத்துவ சிகிச்சை தேவைப்படும் ஒருவராயின், அரச மருத்துவ நிலையத்திலிருந்து பெறப்பட்ட, உங்கள் மருத்துவ நிலைமை சம்பந்தமாக விபரங்கள் மற்றும் அதற்கான சிகிச்சைகள் அடங்கிய மருத்துவக் குறிப்புகளை UNHCR மருத்துவ இலாகா (IAD) இடம் தொலைநகல் (03-21171493) அல்லது திங்கள், செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையில் நேரடியாக சமர்ப்பிக்கலாம். அத்துடன் இக்குறிப்புக்களை (mlsluiad@unhcr.org) என்ற மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பலாம்.

## நீண்டகால தீர்வு

நீங்கள் அகதியாக நிர்ணயிக்கப்பட்டால், உங்களுக்கு அகதி அந்தஸ்து சான்றிதழுக்குப் பதிலாக அகதி அந்தஸ்து அட்டை வழங்கப்படும். அதன் பின்னர் உங்களுக்கான நீண்டகால தீர்வுக்கான வழிகளான, சொந்த விருப்பில் நாடு திரும்புதல், ஆதரவளிக்கும் நாட்டில் சட்டபூர்வமாக குடியேற்றம் மற்றும் மூன்றாம் நாட்டிற்கான குடியேற்ற வழிகளை unhcr ஆராயும்.

பாதுகாப்பாக *<u>சொந்தவிருப்பில் நாடு திரும்ப</u>* ஒரு அகதி விருபப்பட்டால் UNHCR இன் உதவியை நாடலாம்.

*<u>உள்ளூர் ஒருங்கிணைப்பு:</u>* ஒரு அகதி, தான் தஞ்சம் புகுந்த நாட்டில் சட்டபூர்வமாக குடியுரிமை பெற்று அந்த நாட்டுக் குடிமகனுக்கான உரிமைகளுடன் பாதுகாப்பாக வாழலாம்.

*<u>மூன்றாம் நாட்டில் மீள்குடியேற்றம்</u>* என்றால், தஞ்சம் புகுந்த நாட்டில் இருந்து இன்னுமொரு நாட்டிற்கு சட்டபூர்வமாக நிரந்தரக் குடியுறிமை பெற்று வசித்தல். *மீள்குடியேற்றம் ஒரு உரிமை அல்ல.* உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கடைப்பாடு UNHCR இற்கு கிடையாது. உங்களது விண்ணப்பம் மீள்குடியேற்றத்துக்கு தகுதி பெறுமேயானால், அது சம்பந்தமான ஆலோசணையும் மற்றும் உங்கள் விண்ணப்பத்தை UNHCR மதிப்பீடு செய்யும். எல்லா அகதிகளும் மீள்குடியேற்றத்துக்கு தகுதியானவர்கள் அல்ல என்பதையும் மேலும், மேலதிக மதிப்பீடு சம்பந்தமாக எல்லா அகதிகளையும் UNHCR தொடர்பு கொள்ளமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

நீண்டகால தீர்வுப் பிரிவை mlslurst@unhcr.org என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம்..

தினசரி அலுவலகதில் பெற்றுக்கொள்ளும் அதிகளவு கேள்விகளால் காலதாமதம் ஏற்படலாம். தயவு செய்து பொறுமையைக் கையாளவும். உங்கள் கேள்விகளுக்கு எவ்வளவு விரவாக பதிலளிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக பதிலளிப்போம்.

**UNHCR இன் சகல சேவைகளும் இலவசம்.**
**UNHCR இன் சேவைகளுக்கு யாராவது பணமோ அல்லது எந்தவொரு சேவைகளையோ பெருவாராயின் உடனடியாக UNHCR இன் புகார்பெட்டி மூலமாகவோ அல்லது mlslu@unhcr.org என்ற மின்னஞ்சல் ஊடாகத் தெரிவிக்கவும்.**

## UNHCR தொடர்புகள்

| <u>**முகவரி:**</u> | <u>**இணையத்தளம்:**</u> |
|---|---|
| **UNHCR Representation in Malaysia<br>570, Jalan Bukit Petaling<br>P.O. Box 10185,<br>50706 Kuala Lumpur**<br><br>**தொ.பேசி: +603-2118 4800<br>தொ.நகல்: +603-2141 1780<br>மின்னஞ்சல்:<br>mlslu@unhcr.org** | **http://www.unhcr.org.my**<br><br>இந்த இணையத்தளத்தில் “Information for Refugees” (அகதிகளுக்கான தகவல்) என்ற பகுதியை வழமையாக வலம் வரவும். உங்களுக்கு உதவக்கூடிய தகவல்களை இந்த இணையத்தலம் ஊடாக பிரசுரிப்போம். |

**நீங்கள் UNHCRஐ எந்தவொரு காரணத்துக்காகவும் அணுகும்போது உங்களுடைய கோப்பு எண்ணை எப்பொழுதும் குறிப்பிடவும். மூன்றாம் நபருடன் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.**

## முறைப்பாடுகள்:

முறையற்ற வகையில் நடத்துதல், துன்புறுத்துதல், துஷ்பிரயோகம் செய்தல் போன்ற முறையீடுகளை உடனடியாக UNHCR இன் புகார்பெட்டி மூலமாகவோ அல்லது mlslu@unhcr.org மின்னஞ்சல் ஊடாக தெரிவிக்கவும். உங்களுடைய முறைப்பாடுகள் உணர்ச்சிபூர்வமாகவும், பாதுகாப்பாகவும் கையாளப்படும்.
அநாமதேய முறைப்பாடுகள் UNHCR இனால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.